UNITED NATIONS
SRI LANKA

## ஊடக அறிக்கை

# ஐக்கிய நாடுகள் இலங்கை வதிவிட ஒருங்கமைப்பாளரின் மறைவினால் ஐக்கிய நாடுகள் அமைப்பு துயரம் அனுஷ்டிக்கிறது

**23 பெப்ருவரி 2018 கொழும்பு, இலங்கை**

ஐக்கிய நாடுகள் இலங்கையானது தனது வதிவிட ஒருங்கமைப்பாளர் திருமதி. ஊனா மக்கொலி அவர்களினது திடீர் மறைவினை மிகுந்த துயரத்துடன் அறிவிக்கிறது,

54 வயதுடைய திருமதி. மக்கொலி அவர்கள் மருத்துவ சிகிச்சை பெற்று வந்த நிலையில் மருத்துவ விடுப்பில் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் முதலாவது பெண் ஐநா வதிவிட ஒருங்கமைப்பாளரான திருமதி மக்கொலி ஒரு தைரியமும் உறுதியும் கொண்ட ஒரு தலைவராவார். அதி சிரேஷ்ட ஐநா உத்தியோகத்தராக ஊனா மக்கொலி 21 வதிவிட, வதிவிடமல்லாத ஐநா முகவரகங்களை கொண்ட குழுவுக்கு தலைமை தாங்கியதுடன் ஐக்கியநாடுகள் செயலாளர் நாயகத்தின் இலங்கைப்பிரதிநிதியாகவும் கடமையாற்றினார். மனித நேயமுள்ள ஒரு பெண்மணியாக அவரது வாழ்க்கையை உலகின் மக்களுக்கு அர்ப்பணித்த ஒருவராக அவர் திகழ்ந்தார்.

திருமதி. மக்கொலி இலங்கையில் ஆறுவருடங்கள் கடமையாற்றியிருந்தார். இரண்டு வருடங்கள் ஐநா வதிவிட ஒருங்கமைப்பாளராகவும், UNDP இலங்கைப்பிரதிநிதியாகவும் கடமையாற்றியிருந்தார். அதற்கு முன்னர் அவர் பனாமா மற்றும் டோகோ நாடுகளின் UNICEF பிரதிநிதியாகவும் சூடான், கென்யா, மற்றும் அங்கோலா ஆகிய நாடுகளில் UNICEF அலுவலராகவும் பணிபுரிந்தார். 17 வருடங்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பிலும் 7 வருடங்கள் அபிவிருத்தி துறையில் சிறுவர்களுடனும் பணியாற்றிய திருமதி மக்கொலி பல கொள்கைகளை வடிவமைத்ததிலும் பல நாடுகளில் நிலவும் உலகளாவிய பிரச்சனைகளை தீர்ப்பதற்கான சட்டகத்தை வடிவமைத்ததிலும் பெரும் பங்காற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இவர் அயர்லாந்து, ஐக்கிய இராட்சியத்தினை தனது சொந்த ஊராக கொண்டிருந்ததுடன் இரண்டு மகன்களின் பாசமுள்ள அன்னையும் ஆவார்.

ஐக்கிய நாடுகள் குடும்பமானது அவரின் நகைச்சுவை, தாழ்மையான குணம், உத்வேகம், சேவை மனப்பான்மை, மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான அவரின் அர்ப்பணிப்பு என்பவற்றை துயரத்தோடு எண்ணிப்பார்க்கிறது. அன்னாரது குடும்பத்துக்கும் எங்கள் ஆழ்ந்த அஞ்சலியை தெரிவித்து கொள்கிறோம்.

அன்புள்ள ஊனா, தங்களை நாங்கள் மறக்கப்போவதில்லை.